# பாநயம் பாராட்டுதல்

மனிதரெலாம் அன்புநெறி காண்ப தற்கும்
மனோபாவம் வானைப்போல் விரிவ டைந்து
தனிமனிதத் தத்துவமாம் இருளைப் போக்கிச்
சக மக்கள் ஒன்றென்ப துணர்வத ற்கும்
இனிதினிதாய் எழுந்தஉயர் எண்ண மெல்லாம்
இலகுவது புலவர்தரு சுவடிச் சாலை
புனிதமுற்று மக்கள்புது வாழ்வு வேண்டில்
புத்தகசா லைவேண்டும் நாட்டில் யாண்டும்

- பாரதிதாசன்

## நூல் நிலையம்

### திரண்ட கருத்து

மனிதர்கள் அன்பு நெறி காணவும், மனம் விரிவடையவும், சமத்துவ உணர்வு ஏற்படவும், உயர்ந்த எண்ணம் உருவாகவும் அமைய வேண்டியது நூல்நிலையம் ஆகும். மக்களுக்குப் புதுவாழ்வு ஏற்படவேண்டுமென்றால் நாடு முழுவதும் நூல்நிலையம் ஏற்படவேண்டும்.

### மையக் கருத்து

நூல்நிலையங்களை நாட்டில் அமையவேண்டும்.

### மோனை நயம்

காட்டுக்கு அழகு யானை
கவிதைக்கு அழகு மோனை

ஒவ்வொரு அடியிலும் முதல் சீரின் முதல் எழுத்து ஒன்றிவருவது மோனை எனப்படும். இப்பாடலில் மோனை பயின்றுள்ளது.

சான்று – மனிதரெலாம், மனோபாவம், இனிதினிதாய், இலகுவதாய், புனிதமுற்று, புத்தகசா

### எதுகை நயம்

யானைக்கு அழகு துதிக்கை
கவிதைக்கு அழகு எதுகை

ஒவ்வொரு அடியிலும் முதல் சீரின் இரண்டாம் எழுத்து ஒன்றிவருவது மோனை எனப்படும். இப்பாடலில் எதுகை பயின்றுள்ளது.

சான்று – மனிதரெலாம், மனிதரெலாம்
மனோபாவம், தனிமனிதத்

### பாநயம்

வாழ்க்கைக்கு அழகு பாப்பா
கவிதைக்கு அழகு பா பா

ஒவ்வொரு அடியிலும் ஆறு சீர்கள் பயின்றுள்ளதால், இது **அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்** ஆனது.

### அணி நயம்

கழுத்துக்கு அழகு மணி
கவிதைக்கு அழகு அணி

ஒரு செய்யுளைச் சொல்லாலும் பொருளாலும் அழகுபடுத்திக் கூறுவது அணி எனப்படும்.

இப்பாடலில் “போல்” என்று சீர் வெளிப்படையாக வந்துள்ளது. எனவே இது **உவமையணி** ஆகிறது.

### தலைப்பு நயம்

மனிதனுக்கு அழகு மலைப்பு
கவிதைக்கு அழகு தலைப்பு

இப்பாடலின் தலைப்பு **நூல்நிலையம்** அல்லது **புத்தகச்சாலை** ஆகும்.

### முடிவுரை

இப்பாடலில்,

1. அடிமோனை
2. அடி எதுகை, சீர் எதுகை
3. அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
4. உவமையணி
5. தலைப்பாக நூல்நிலையம்

ஆகியவை பயின்றுள்ளன.